சமர்ப்பித்து அந்தந்தப் பகுதிகளில் ஆங்காங்கு உள்ளவர்களை ஊக்குவிப்பதற்கான வழிமுறைகளைக் காண்பது சிறப்பாக இருக்குமே. அதுவல்லாமல் இம்மாதிரி காரியங்களை, இதுபோன்ற சிறு இண்டஸ்ட்ரீஸ்களுக்கு யார் யார் விண்ணப்பிக்கிறார்களோ அவர்களுக்கு செய்வது என்ற முறையில் செய்தால் பிற்காலத்தில் சங்கடங்கள் ஏற்படுமே, அதைக் கவனித்து கயிறு திரிக்காமல் கயிறு இண்டஸ்ட்ரீஸ் ஏற்பட ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இதற்காக எக்ஸ்பர்ட் கமிட்டி போட்டு வழங்க வேண்டுமென்ற அவசியமில்லை. இப்பொழுதே சேலம் மாவட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் தொழிற்சாலைகளுக்கான வாய்ப்புகள் இருக்கின்றன. தஞ்சாவூர் மாவட்டத்திலும் இருக்கிறது. ஏற்கெனவே உதவி செய்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் சேலம் மாவட்டத்திலே சில இன்டஸ்ட்ரீஸ் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகளை ஆரம்பித்து அரசாங்கத்தின் உதவியைக் கேட்டால் நிச்சயமாக உதவும். அரசாங்கத்தின் நோக்கம் இந்தத் தொழில் க்ஷீணதசை அடையக்கூடாது என்றுதான் கருதுகிறது. இப்பொழுதுள்ள திட்டத்தின்படி ஆங்காங்கு இருப்பவர்கள் முயற்சித்து கூட்டுறவு மூலம் அரசாங்க உதவியை வேண்டினால் அரசாங்கம் உதவும். ஏற்கெனவே 10 இலட்சம் ரூபாய் வரை உதவி செய்திருக்கிறது. இன்னும் 7 இலட்சம் ரூபாய் கேட்டிருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இன்றும் தீவிரமாகக் காரியங்களைச் செய்து வருகிறது.

Leather Finishing Centres.

*670 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the State Government propose to set up leather finishing centres in the State ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) மாநிலத்தில் செப்பமிடப்பெற்ற தோல் பதனிடு பணிநிலையங்களை அரசுத்துறைப் பிரிவுகளாக அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை. ஆயினும், அம்மாதிரியான நிலையங்களை தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் மூலமாகவும், கூட்டுறவுத் துறையிலும் அமைக்கும் செயற்குறிப்புகள் உள்ளன.

1975 ஏப்ரல் 15]

திரு. என். கே. பழனிசாமி : சார், நம் மாநிலத்திலேயிருந்துதான் இந்தியாவிலே அதிகமாகத் தோல் வெளிநாட்டிற்கு அனுப்பப்படுகிறது. அங்கே பதனிட்டு நம் நாட்டிற்குத் திருப்பிக் கொண்டு வருகிருர்கள். இந்த நிலைமை போக வேண்டுமானல் நாமே மாடர்ன் மெதட்-லே இங்கிருந்து வெளிநாட்டிற்கு அனுப்பும் தோல்களை இங்கேயே பதனிட்டுச் செய்வதற்குச் சர்க்கார் விரிவான திட்டத்திற்கு ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே சர்விஸ் சென்டர்களை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு இருக்கிறது. அந்த சர்வீஸ் செண்டர்களை பல்லாவரம், இராணிப்பேட்டை, ஆம்பூர், வாணியம்பாடி, திண்டுக்கல், பேரணும்பட்டு, ஈரோடு போன்ற இடங்களில் அமைக்கலாம் என்ற பரிசீலனை இருக்கிறது. இப்படிப்பட்ட சர்வீஸ் செண்டர்களை அமைப்பதன் மூலம் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு உதவி செய்ய முடியும் என்று அரசு கருதுகிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்தத் தோல்பொருள் வேலை நிறைவு நிலையங்களை இன்னும் நம் மாநிலத்தில் ஆரம்பிக்காத நிலையிலே மத்திய அரசு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தோல் பொருள்களை முடிந்த நிலையிலே, அதாவது ஃபினிஷ்ட் அளவிலே இருக்க வேண்டுமென்ற கட்டுப்பாட்டை நிர்ணயித்திருப்பதன் மூலம் இந்தத் தோல் தொழிலில் சிக்கலான நிலைமை ஏற்பட்டிருக்கிறதே, அதைப்போக்க தனியார்கள் தொடங்கவிருக்கும் இந்த வேலைநிறைவு நிலையங்களுக்கு அரசு மிகுந்த உதவி செய்வதோடு இதற்கு முன்னுரிமை தந்து நம் மாநிலத்திலே அதிகமான தோல்பொருள் வேலைநிறைவு நிலையங்களை உடனடியாக உண்டாக்குவதற்கான வழிவகைகளைக் காணுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நம்முடைய மாநிலத்திலே 'லெதர் டெவலெப்மென்ட் கார்ப்பரேஷன்' அமைக்க குறிப்பு இருக்கிறது. அந்த கார்ப்பரேஷன் மூலம் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையிலே வாய்ப்பு உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பட்டு உற்பத்திப் பயிற்சிப் பள்ளி.

*671 வினு—திரு. எம். முத்தையா : மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தருமபுரி மாவட்டம், ஓசூரில் பட்டு உற்பத்தியைப் பெருக்குவதற்கான பயிற்சிப் பள்ளி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதா?